பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**17 11 2025 MONDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** வங்கக்கடலில் மேலும் ஒரு காற்றழுத்த தாழ்வுப்பகுதி வரும் சனிக்கிழமை உருவாகக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

**2)** மின்னணு உதிரி பாகங்கள் உற்பத்தித்திட்டத்தின்கீழ், **17** திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**3)** மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ், இதுவரை இரண்டரை கோடி பேர் பயனடைந்திருப்பதாக தமிழக அரசு கூறியுள்ளது.

**4)** திமுக அரசின் நிர்வாக திறமையின்மை காரணமாக டெல்டா மாவட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

**5)** உலக துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் **Gurpreet Singh** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>>

வங்கக்கடலில் மேலும் ஒரு காற்றழுத்த தாழ்வுப்பகுதி வரும் சனிக்கிழமை உருவாகக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***(Sound Byte — செந்தாமரை கண்ணன் (1) - 21 Sec. )***

திருவள்ளூர், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் டெல்டா மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமுதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்தார்.

***(Sound Byte — செந்தாமரை கண்ணன் (2) - 69 Sec. )***

இதற்கிடையே, மாநிலம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று காலை முதல் விட்டு விட்டு மழை பெய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>>>

மின்னணு உதிரி பாகங்கள் உற்பத்தித்திட்டத்தின்கீழ், 17 திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஏழாயிரத்து **172** கோடி ரூபாய் முதலீட்டில் இந்த திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளதாக தெரிவித்தார்.

இதன்மூலம், **11** ஆயிரத்து **808** பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்றும் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<<>>>>>>>

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ், இரண்டரை கோடி பேர் பயனடைந்திருப்பதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், ஐ நா விருதையும் இந்த திட்டம் வென்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டத்தை சிறப்புற செயல்படுத்திவரும் அதிகாரிகளுக்கும், மருத்துவப்பணியாளர்களுக்கும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதாகவும் திரு மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

<<<<<>>>>>>>

தமிழகத்தில் வேளாண் பட்டப்படிப்பு மற்றும் பட்டயப்படிப்பு முடித்த இளையோர் உழவர் நல சேவை மையங்கள் அமைக்க விண்ணப்பிக்குமாறு மாநில அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், விவசாயிகளுக்கு உதவிடும் வகையில் ஆயிரம் மையங்கள் அமைக்க 42 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுவரை, இதற்காக ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளையோர் விண்ணப்பித்துள்ளதாகவும், 413 பேருக்கு வங்கிக்கடன் வழங்கப்பட்டுள்ளதாகவும் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>>

தமிழகத்தில் திமுக கூட்டணி வலுவாக உள்ளதாக மாநில அமைச்சர் திரு எ வ வேலு கூறியுள்ளார்.

இன்று ஈரோட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மக்கள் நலனுக்காக பல்வேறு திட்டங்களை திமுக அரசு நிறைவேற்றியுள்ளதாக தெரிவித்தார்.

<<<<<>>>>>>

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளில் ஆட்சி அதிகாரத்தை பயன்படுத்தி திமுக அரசு பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுவதாக கூறி, அஇஅதிமுக சார்பில் இன்று கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

மாநிலம் முழுவதும் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டங்களில் அக்கட்சியினர் ஏராளமானோர் பங்கேற்றனர்.

நாமக்கல்லில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற முன்னாள் அமைச்சர் திரு தங்கமணி பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

மக்கள் நலனில் அக்கறையின்றி திமுக அரசு செயல்படுவதாக அவர் குற்றம் சாட்டினார்.

<<<<<>>>>>>>

திமுக அரசின் நிர்வாக திறமையின்மை காரணமாக, டெல்டா மாவட்ட விவசாயிகள் பாதிப்படைந்துள்ளதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், கூட்டுறவு சங்கங்களிலும், கடைகளிலும் யூரியா இல்லை என்ற நிலை தொடர்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

போதுமான அளவு யூரியா கையிருப்பில் உள்ளதாக திமுக அரசு கூறிவரும் நிலையில், விவசாயிகள் இப்பிரச்சினையை எதிர்கொண்டு வருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>>

தேர்தல் தோல்வி பயம் காரணமாக வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளுக்கு திமுக எதிர்ப்பு தெரிவிப்பதாக த மா கா தலைவர் திரு ஜி கே வாசன் குற்றம் சாட்டியுள்ளர்.

இன்று சேலத்தில் அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமியை சந்தித்து ஆலோசனை நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் மேலும் பல கட்சிகள் இணைய வாய்ப்புள்ளதாக அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் குற்றச்சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும், சட்டம் — ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும், திரு ஜி கே வாசன் குறை கூறினார்.

<<<<<>>>>>>

சேர்வராயன் மலைப்பகுதி அடிவாரத்தில் **50** ஹெக்டேர் பரப்பளவில் வனத்துறை, நகர்வனத்தை உருவாக்கியுள்ளது.

இந்த நகர்வனம், சேலத்தின் அடையாளமாக மாறியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — விஜய்குமார் — 40 Sec. )***

<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்துவாக்குச்சாவடி மையங்களிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் தொடர்பான உதவி மையங்கள் நாளை முதல், வரும் 25-ஆம் தேதிவரை செயல்படும் என்று மாநகராட்சி ஆணையர் திரு குமரகுருபரன் கூறியுள்ளார்.

---------------

மதுரை மாவட்டத்தில் நடைபெறவுள்ள ஊரக கைவினைக்கலைஞர்கள் உற்பத்தி செய்த பொருட்களின் விற்பனை கண்காட்சிக்கான விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு பிரவீன் குமார் இன்று தொடங்கிவைத்தார்.

-----------------

திருவண்ணாமலையில் நடைபெறவுள்ள கார்த்திகை தீப திருவிழாவிற்காக மாநகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள் குறித்து நகராட்சி நிர்வாக இயக்குனர் திரு மதுசூதன் ரெட்டி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

------------------

தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளதாக ஆட்சியர் திரு இளம்பகவத் அறிவித்துள்ளார்.

-----------------

நீலகிரி மாவட்டம் உதகை அருகே யானை வழித்தடத்தில் விதிமுறைகளை மீறி கட்டப்பட்டதாக கூறி, குடியிருப்பு ஒன்றை இடித்து மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

-----------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் மருந்தியல் கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

<<<<<>>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

உலக துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் **Gurpreet Singh** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

எகிப்தில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் **25** மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

இப்போட்டியில், இந்தியா **3** தங்கம், **6** வெள்ளி, **4** வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் மூன்றாவது இடத்தை பிடித்தது.

**Deaflympics** போட்டியில் இந்தியா இன்று ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் பத்து மீட்டர் துப்பாக்கிச்சுடும் பிரிவில் **Anuya Prasad** தங்கப்பதக்கத்தையும், **Pranjali Dhumal** வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

இப்போட்டியில், இந்தியா இதுவரை 2 தங்கம், 4 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.

----------------

உலகக்கோப்பை இறுதி குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் **Pawan Bartwal** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

கிரேட்டர் நொய்டாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 55 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், கஜகஸ்தானின் **Altynbek Nursultan** -ஐ வென்றார்.

ஆடவர் 75 கிலோ எடைப்பிரிவில் **Sumit Kundu**-வும், 90 கிலோ எடைப்பிரிவில் நவீன்குமாரும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

**<<<<<END>>>>>>**